**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.**

அசல் வழக்கு எண். 73/2013.

நாள். 05.10.2023.

பெயர். கிருஷ்ணமூர்த்தி த/பெ. பெருமாள் கவுண்டர்.

வா.சா.1 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

1. நான் நிலம் வாங்கிய பிறகு கோவில் கட்ட நான் தான் இடம் கொடுத்தேன். நெல் உலர் களம் எப்போது கட்டினார்கள் என்றால் நான் நிலம் வாங்கிய பிறகு கட்டினார்கள். நான் தான் அனுமதி கொடுத்தேன். மேற்படி கோவில் கட்டுவதற்கும், நெல் உலர் களம் கட்டுவதற்கும் அனுமதி அளித்ததற்கு எழுத்துப்பூர்வமான ஆவணம் ஏதேனும் இருக்கிறதா என்றால் இல்லை.

2. வழக்கு சொத்தில் மாரியம்மன் கோவில் மற்றும் நெல் உலர் களன் இருக்கிறது என்றால் சரிதான். மாரியம்மன் கோவில் மற்றும் நெல் உலர் களன் வழக்கு சொத்தில் சுமாராக 1 1/2 சென்ட் அல்லது 2 சென்ட் நிலத்தில் இருக்கும். மேற்படி விவரத்தை எனது வழக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து என் அனுபவத்தில் இருக்கிறது என்பதை காண்பிக்க அடங்கல் மற்றும் வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் மேற்படி வழக்கு சொத்தில், கம்பு, கேழ்வரகு, நிலக்கடலை, உளுந்தம் பருப்பு, காரமணி ஆகியவை பயிர் செய்துள்ளேன். மேற்படி விவரத்தை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

3. மேற்படி பயிர் வகைகளை பயிரிட்டுள்ளேன் என்பதை காண்பிக்க அடங்கல் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கில் மேற்படி மாரியம்மன் கோவில் மற்றும் நெல் உலர் களன் உள்ள நிலத்தை தவிர்த்து மீதி உள்ள நிலத்திற்கு விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் இல்லை முழு சொத்திற்கும் சேர்த்து தான் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேன் அதில் நெல் உலர் களன் மற்றும் மாரியம்மன் கோவிலும் அடங்கும்.

4. மேற்படி மாரியம்மன் கோவில் உள்ள நிலம் கோவிலுக்கும், நெல் உலர் களன் உள்ள நிலம் அரசாங்கத்திற்கும் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை நான் அனுபவிக்கவில்லை என்றாலும், வழக்கு சொத்தில் மாரியம்மன் கோவில் மற்றும் நெல் உலர் களன் உள்ளது என்றாலும், நான் வருவாய்த்துறையை ஏமாற்றி பெயரளவில் பட்டா பெற்றுள்ளேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் கணேசன் மற்றும் கண்ணன் ஆகியோரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால்

P. Krishnan

சரிதான். இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

5. இவ்வழக்கில் எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் பட்டா சம்பந்தமாக பிரச்சினை என்றால் சரிதான். 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கெதிராக பரிகாரம் ஏதேனும் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். நான் 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கெதிராக எந்தவிதமான பரிகாரமும் கோராததால் இவ்வழக்கை அவர்களை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

P. Kishore

Taken Down before by me in open court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

P.T. [signature] 25-10-23
District Munsif
Arni.